ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சூழற்புவியியல் நோக்கில் நெடுநல்வாடை

*முனைவர் க.சித்ரா,*
*உதவிப்பேராசிரியை,*
*எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம்,ராமாபுரம், சென்னை.*

*ஆய்வுச் சுருக்கம்*

*இயற்கைக் கூறுகளான நிலம்,பருவகாலம் பஞ்சபூதங்களால் உருவான சுற்றுச்சூழல்,வானியல், மனிதர், பிற உயிர்கள் உள்ளிட்ட புவி சார்ந்த செய்திகளைக் குறித்து ஆராய்வது இயற்கைப் புவியியல். பழங்கால மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டதோடு அதனைப் பேணிப் பாதுகாத்தும் வந்தான். சூழலுடனான மனிதரின் தொடர்புகள் உலகமயமாதல், தொழில்நுட்ப மாற்றங்கள், போன்றவற்றால் மாற்றம் பெற்று வருகிறது. இயற்கைப் பாதுகாப்பு தொடர்பான தீர்வுகளுக்கு வரலாறுகளைத் திரும்பிப் பார்க்கும் நிலை உருவாகி வருகிறது. பண்டைய தமிழ்மக்கள் இயற்கையை எவ்வாறு அணுகினர் இயற்கையோடு தம்மை எவ்வாறு தொடர்புபடுத்தி இயங்கினர் என்பதை நோக்கமாகக்கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. பழங்காலத் தமிழகத்தின் சூழற்புவியியல் கூறுகளான வாழிடம், உயிரினம்,பருவகாலம், சூழல் ஆகியவை குறித்து அறிவதும் அத்தகைய கூறுகளை பழங்கால மனிதன் எவ்வாறு பேணினான் என்பது குறித்து அறிவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும். பழங்கால மனிதர் தமது வாழிடங்களாக ஓங்கி உயர்ந்த மாடங்கள், அம்மாடங்களில் வேனில் பள்ளிகள், மதலைப்பள்ளி, உயர்ந்த மேனிலைகள் ஆகியன அமைக்கப்பட்டிருந்தன. வீட்டின் மேற்கூரையைத் தாங்கும் பலகைகளில் (மதலைப்பள்ளி) புறாக்கள் வசித்தன. அப்புறாக்கள் ‘மனையுறை புறாக்கள்’ என்றே சுட்டப்படுகின்றன. இது அன்றைய உயிரினப் பேணலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. அக்கால வாழிடங்கள் பற்றிய குறிப்புகள் யாவற்றிலும் மான்கள்,அன்னங்கள்,புறாக்கள்,மயில்கள் என உயிரினங்களும் சேர்ந்தே பதிவுசெய்யப்பட்டுள்ளன. மக்கள் வாழ்வியலிலும் புலவர்களின் கட்புலனிலும் அவை நீங்கா இடம்பெற்றிருந்தமையை அறிய முடிகிறது. அரண்மனைகளில் குதிரைகளின் ஒலியும், நீர் விழும் ஓசையும், மயில்கள் அகவும் ஒலியும் ஒலித்துக்கொண்டிருந்ததாக நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இயற்கையோடு இயைந்த வாழிடச்சூழலை இது எடுத்துக்காட்டுகிறது.*

*அக்காலம் முதல் இக்காலம் வரை சந்தனம் மக்களின் பயன்படுபொருளாக இருந்து வருவதை அறியமுடிகிறது. பெண்கள் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை அணியும் வழக்கம் கொண்டிருந்ததை அறியமுடிகிறது. விசேக்ஷ நாட்கள், திருமணம் போன்ற சடங்குகளில் மட்டும் அட்சதைப் பொருளாகப் பயன்படுத்தப்படும் நெல் நாள்தோறும் இறைவழிபாட்டில் மலர்களுடன் சேர்த்து பயன்படுத்தப்பட்டுள்ளது. சாதிலிங்கம், கமுகு மரங்கள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. முசுண்டை, பீர்க்கங்கொடிகள் புதர்போல் மண்டிக்கிடந்துள்ளன. நெற்பயிர்கள் செழித்திருந்தன. பழங்கால தாவர வளமைக்குச் சான்றாக இவற்றைக் கருதமுடிகிறது. பசுக்கள், காளைகள், குதிரைகள், குரங்கு, மான், யானை, புலி, ஆடு ஆகிய விலங்குகள் அன்னம்,குருகு,கொக்கு,புறா,மயில் ஆகிய பறவைகளும் இந்நூலில் பதிவிடப்பட்டுள்ளன. இன்றைய சூழலில் காடுகள், வனவிலங்குப் பூங்காக்களில் மட்டுமே பார்க்கும் மான்கள் அரண்மனை முற்றங்களில் சுற்றித்திரிந்ததாகக் குறிக்கப்படுவது அக்காலத்து இத்தகைய உயிரினங்களின் வளமையைக் காட்டுகின்றன. குளிர்ச்சிக்காக சந்தனம், காற்றுக்காக கைவிசிறி, இசைக்காக யாழ், இறைவழிபாட்டிற்காக இரும்புவிளக்கு, தண்ணீர் பருக குவளை,*

அரச குடும்பமாயின் படுத்துறங்க கட்டில் தலையணைகள், உடுக்க உடை, குழை முதலான அணிகலன்கள், ஆகிய பயன்பாட்டுப் பொருட்களை இந்நூல் வழி அறியமுடிகிறது. அக்கால தாவரங்கள், விலங்குகள்,பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களின் வளமையையும் இயற்கைக்குப் பாதிப்பில்லாத பாதுகாப்பான வாழிடச்சூழலையும் பற்றி நெடுநல்வாடை இலக்கியம் மூலமாக அறியமுடிகிறது.

திறவுச்சொற்கள் :(Key words)

முன்னுரை - சூழற்புவியியல் -தமிழர் வாழிடச்சூழல் -நெடுநல்வாடை - பழந்தமிழர் வாழிடச்சூழல் வாழிடம் பற்றிய குறிப்புகள் –பருவகாலச்சூழல் - வளமிக்க இயற்கைச்சூழல் - வளமிக்க இயற்கைச்சூழல் – முடிவுரை.

---

சூழற்புவியியல் நோக்கில் நெடுநல்வாடை

முன்னுரை :

இயற்கைக் கூறுகளான நிலம்,பருவகாலம் பஞ்சபூதங்களால் உருவான சுற்றுச்சூழல்,வானியல், மனிதர், பிற உயிர்கள் உள்ளிட்ட புவி சார்ந்த செய்திகளைக் குறித்து ஆராய்வது இயற்கைப் புவியியல். வரலாறு தோறும் மனித வாழ்வின் போக்குகளை ஆராய்கையில் இயற்கைச்சூழல் முக்கிய இடம் வகிக்கிறது. பழங்கால மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டதோடு அதனைப் பேணிப் பாதுகாத்தும் வந்தான். சூழலுடனான மனிதரின் தொடர்புகள் உலகமயமாதல், தொழில்நுட்ப மாற்றங்கள், போன்றவற்றால் மாற்றம் பெற்று வருகிறது. இயற்கைப் பாதுகாப்பு தொடர்பான தீர்வுகளுக்கு வரலாறுகளைத் திரும்பிப் பார்க்கும் நிலை உருவாகி வருகிறது. பண்டைய தமிழ்மக்கள் இயற்கையை எவ்வாறு அணுகினர் இயற்கையோடு தம்மை எவ்வாறு தொடர்புபடுத்தி இயங்கினர் என்பதை நோக்கமாகக்கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

சூழற்புவியியல் :

சூழற்புவியியல் புவியியலின் ஒருகிளைத்துறை. இது மனிதருக்கும் இயற்கை உலகுக்கும் இடையிலான தொடர்புகளின் இடம்சார்ந்த அம்சங்களையும் சூழலை எவ்வாறு மனிதர் கருத்துருவாக்கம் செய்கிறார்கள் என்பதையும் விளக்குகிறது. பேரழிவுமேலாண்மை (Disaster Management) சூழல்மேலாண்மை, தாங்குதிறன் (Sustainability), அரசியல்சூழலியல் (Political ecology) என்பனசூழற்புவியியலின்கீழ்அடங்கும்ஆய்வுப்பரப்புகள்ஆகும்.

தமிழர் வாழிடச்சூழல் :

மனிதன் தனது வாழ்விற்காக உணவு,உடை,இருப்பிடம் ஆகிய மூன்று கூறுகளை அடிப்படைத் தேவையாகக் கொண்டுள்ளான். இவற்றுள் உணவு, உடை ஆகியவற்றைத் தனது தேவைக்கேற்ப உற்பத்தி செய்கிறான். வாழிடத்தைத் தனது தேவையைப் பொறுத்து நிர்மாணித்துக் கொள்கிறான்.

“முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பென மொழிப மொழிப இயல்புணர்ந்தோரே”- தொல்.அகத்.நூ.4

என்று தொல்காப்பியர் அடிப்படையான முதற்பொருளாக நிலத்தையும் பொழுதையும் குறிப்பிடுகிறார். நிலம் மனித வரலாற்றில் ஆதி முதல் தொடர்புடைய ஒன்று. பழங்காலத் தமிழகத்தில் முதற்பொருளான நிலம் குறிஞ்சி, முல்லை,மருதம், நெய்தல், பாலை என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதி, காட்டுப்பகுதி, வயல்பகுதி, கடற்கரை மணற்பகுதி, குறிஞ்சி, முல்லைப்பகுதி திரிந்த பாலைப்பகுதி ஆகியன. மனித வாழ்வியலோடு இந்த வாழ்விடங்கள் பிணைக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. இந்நிலங்கள் சார்ந்த அல்லது இந்நிலங்களுக்குப் பொருத்தமான கருப்பொருட்களும் உரிப்பொருட்களும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய வரையறைகள் மனித வாழ்வியல் அடிப்படையிலானவை. அறிவியல் அடிப்படையிலான நோக்கத்தில் ஆராயுங்கால் மனிதன் இப்புவியில் சார்ந்திருக்கும் இருப்பிடங்களை கீழ்க்காணும் நான்கு வகைகளாகப் பகுக்கலாம்.

1. மலைகள்
2. பீடபூமிப்பகுதி (மேட்டுநிலம்)

3. சமவெளிப்பகுதிகள்
4. கடலோரப்பகுதிகள்

தொல்காப்பியம் குறிப்பிடும் நிலப்பாகுபாடும் அறிவியல் அடிப்படையிலான பாகுபாடும் பெரும்பான்மை ஒன்றி வருவதைக் காணமுடிகிறது. தமிழ்ச்சமூக மரபில் மலைப்பகுதி குறிஞ்சியாகவும் கடலோரப்பகுதி நெய்தலாகவும் அமைகிறது. சமவெளிகள் என்று குறிப்பிடப்படுபவை மருதநிலங்களாகவும் முல்லைக்காடுகளாகவும் அமைகின்றன. உழவுத்தொழிலுக்கு ஏற்ற வகையிலே சீர்செய்யப்பட்டு உணவு உற்பத்தி நடைபெறும் இடங்கள் மருதநிலங்கள். அவ்வாறு இன்றி காடுகளாகக் காட்சி அளிப்பவை முல்லைநிலங்கள் என்று கருத முடிகிறது. பீடபூமி என்று குறிப்பிடப்படும் மேட்டு நிலங்கள் நிலவியல் அடிப்படையில் கடல் மட்டத்திலிருந்து உயரமான பகுதிகளைக் குறிக்கின்றன. இந்தியாவில் தக்காண பீடபூமி என்பது மேற்குத்தொடர்ச்சி மலைத்தொடர் கிழக்குத்தொடர்ச்சி மலைத்தொடர் மற்றும் விந்தியமலைத்தொடர் ஆகிய மூன்று மலைத்தொடர்களுக்கு நடுவில் முக்கோணவடிவில் உள்ளதாகும். தென்னிந்தியாவின் பெரும்பகுதி தக்காணபீடபூமியைச் சேர்ந்தது. இதன்பரப்பளவு 7 இலட்சம் சதுரகிலோமீட்டர்.

பழங்காலத் தமிழகத்தின் சூழற்புவியியல் கூறுகளான வாழிடம், உயிரினம்,பருவகாலம், சூழல் ஆகியவை குறித்து அறிவதும் அத்தகைய கூறுகளை பழங்கால மனிதன் எவ்வாறு பேணினான் என்பது குறித்து அறிவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும். நெடுநல்வாடை இத்தகைய தகவல்களைப் பெறுவதற்குச் சிறந்த களமாக அமைகிறது.

நெடுநல்வாடை :

நெடுநல்வாடை சங்க இலக்கிய பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். மதுரையைச் சார்ந்த நக்கீரர் இயற்றிய இந்நூல் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. பெரும்பான்மை அகச்செய்திகளைக் கொண்ட இந்நூல் புறம் சார்ந்த ஓரிரு குறிப்புகளைக் கொண்டதால் அகப்புற நூலாக அறியப்படுகிறது. இவ்விலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பழங்கால மக்களின் வாழிடச்சூழல், உயரினச்சூழல், பருவகாலச்சூழல் குறித்து ஆராய்கையில் சூழலியல் சார்ந்த பல கருத்துக்களை அறியமுடிகிறது. சூழலை சங்ககால மனிதன் எவ்வாறு அணுகினான் தமது வாழ்வியலோடு இயற்கையை எவ்வாறு தொடர்புபடுத்திக்கொண்டான் என்பதை அறிய நெடுநல்வாடை நூல் துணைசெய்கிறது.

பழந்தமிழர் வாழிடச்சூழல் :

உலக உயிர்கள் அனைத்தும் நல்ல தகவமைப்புடைய வாழிடங்களைச் சார்ந்தே உள்ளன. உணவைத் தேடி அலைந்த காலத்தில் மனிதருக்கென்று நிலையான வாழிடம் கிடையாது. தனக்கான உணவைத் தானே உற்பத்தி செய்யத்தொடங்கிய பின் மனிதன் ஓரிடத்தில் நிலையாக வாழ முற்பட்டான். அத்தகைய சூழலில் நிலம் அல்லது வாழிடம் மிக இன்றியமையாத ஒன்றாக மாறியது. "சங்கச்சமுதாயம் உணவு உற்பத்தி செய்யும் சமுதாயமாக உடைமைச் சமுதாயமாக மாறிய சூழலில் நிலமே அடிப்படை ஆதாரமாக அமைகின்றது" 1(பெ.மாதையன் - சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம் - 2010 மார்ச்- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.)

அடிப்படை ஆதாரமாக விளங்கிய நிலத்தைச் சார்ந்து மனிதன் தமது வாழிடத்தை உருவாக்கிக்கொண்டான். அவ்வாறு வாழிடங்களை அல்லது இருப்பிடங்களை நிர்மாணிக்கும் போது பழங்கால மனிதன் பின்பற்றிய நெறிமுறைகளை நெடுநல்வாடை அறியத்தருகின்றது. நெடுநல்வாடை இலக்கியம் வாயிலாக அறியப்படும் வாழிடம் பற்றிய குறிப்புகள் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வாழிடம் பற்றிய குறிப்புகள் :

| எண் | வாழிடம் | பாடல் அடிகள் |
|---|---|---|
| 1 | மதலைப்பள்ளி | மதலைப்பள்ளிமாறுவனஇருப்ப.. (50) |
| 2 | காவலை உடைய வியல் நகர் | கடியுடைவியல்நகர்ச்சிறுகுறுந்தொழுவர் |

| | | |
|---|---|---|
| 3 | அந்தப்புரம் | ஆடவர் குறுகா அருங்கடி....(107) |
| 4 | உயர்ந்த மேனிலைகள் | வான்உறநிவந்தமேனிலைமருங்கின் . . . (60) |
| 5 | வேனில் பள்ளி | வேனில்பள்ளித்தென்வளிதரூஉம் (57 – 63) |
| 6 | உயர்ந்தமாடங்கள் | மாடம்ஓங்கியமல்லல்மூதூர்.. .(29) |
| 7 | அகன்ற நெடுந்தெரு | ஆறுகிடந்தன்னஅகல்நெடுந்தெருவில்..(30) |
| 8 | நிலா முற்றம் | நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றத்து(95) |
| 9 | அரண்மனை | குன்று குயின்றன்ன, ஓங்கு நிலை வாயில்(88) |

பழங்கால மனிதர் தமது வாழிடங்களான இல்லங்களை எவ்வாறு அமைத்திருந்தனர் என்பது பற்றிய குறிப்புகளை நெடுநல்வாடை வழி அறியமுடிகிறது. ஓங்கி உயர்ந்த மாடங்கள், அம்மாடங்களில் வேனில் பள்ளிகள், மதலைப்பள்ளி, உயர்ந்த மேனிலைகள் ஆகியன அமைக்கப்பட்டிருந்தன. வீட்டின் மேற்கூரையைத் தாங்கும் பலகைகளில் (மதலைப்பள்ளி) புறாக்கள் வசித்தன. அப்புறாக்கள் ‘மனையுறை புறாக்கள்’ என்றே சுட்டப்படுகின்றன. இது அன்றைய உயிரினப் பேணலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. அகன்ற தெருக்கள் , காவலை உடைய அரண்மனைகள், அரசியர் தங்கும் அந்தப்புரங்கள் என அக்கால வாழிடங்கள் பற்றிய குறிப்புகள் யாவற்றிலும் மான்கள்,அன்னங்கள்,புறாக்கள்,மயில்கள் என உயிரினங்களும் சேர்ந்தே பதிவுசெய்யப்பட்டுள்ளன. மக்கள் வாழ்வியலிலும் புலவர்களின் கட்புலனிலும் அவை நீங்கா இடம்பெற்றிருந்தமையை அறிய முடிகிறது. அரண்மனைகளில் குதிரைகளின் ஒலியும், நீர் விழும் ஓசையும், மயில்கள் அகவும் ஒலியும் ஒலித்துக்கொண்டிருந்ததாக நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இயற்கையோடு இயைந்த வாழிடச்சூழலை இது எடுத்துக்காட்டுகிறது.

வெப்பம் அதிகமான வேனில் காலங்களில் காற்று வருவதற்காக வேனில் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன.“உயர்ந்து எழுந்த மேல்நிலை மாடத்து வேனிற்காலப் படுக்கை அறையில்”( ச.வே.சுப்பிரமணியன்- சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும்” ப.365.) என்று இவ்வரிகளுக்கு உரையாசிரியர் பொருள் விளக்கம் தருகின்றனர். வேனிற்காலங்களில் தென்றல் காற்று வருவதற்கான சாளர அமைப்புடன் படுக்கை அறைகள் அமைக்கப்பட்டிருந்தன என்பது தெளிவாகிறது. சாலேகம் என்ற சொல்லாட்சியும் சாளரத்தைக் குறித்து வழங்குகிறது. "அறைகட்டு அமைக்கப்பெற்ற சாளரங்கள் வெளிக்காற்றை உள்ளே பெறுவதற்கும் உள்காற்றை வெளிப்படுத்தற்குமாக அமைக்கப் பெற்றுள்ளன. இச்சாளரங்கள் காற்றைக் கட்டுப்படுத்தி அளித்திடும் வாய்ப்பினவாகவும் அமைக்கப்பெற்றிருந்த” என்ற கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. (முனைவர். கோ.தெய்வநாயகம் - தமிழர் கட்டிடக்கலை ப.48)

“வளியும் ஒளியும் வழங்கிடும் வாய்ப்புறச் சாளரங்கள் இல்லங்களில் இடம்பெற்றிருந்தன. அதன் வழி வரவுகளைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பாகக் கதவுகள் இடம்பெற்றுள்ளன.இதனை நெடுநல்வாடை சாலேகம் என்றும் வாய்க்கட்டளை எனவும் வழங்குகிறது.” என முனைவர். கோ.தெய்வநாயகம் அவர்கள் குறிப்பிடுகின்றார். (தமிழர் கட்டிடக்கலை ப.48)

இயற்கையுடன் இயைந்த வாழிட அமைப்பிற்கு இது சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. இயற்கையுடன் மாறுபட்டு சாளரங்கள் அமைப்பதில் கூட சிக்கனம் காட்டும் இன்றைய கட்டிட அமைப்புமுறையால் மின் விசிறி, குளிரூட்டி போன்ற செயற்கை சாதனங்களை நாட வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

பருவகாலச்சூழல் :

நெடுநல்வாடை நூல் கார்கால வருணனையில் தொடங்குகிறது. நெடுநல் வாடை என்ற பெயரே இந்நூலுக்கு பருவகாலத்தை மையமாகக்கொண்டு படைக்கப்பட்டுள்ளது. 188 அடிகளைக்கொண்ட இந்நூலில் குறிப்பிடப்படும் நிகழ்வுகள் வாடைக்காலத்தில் நிகழ்வதால் இந்நூல் பருவகாலத்தால் பெயர்கொண்ட ஒரே பத்துப்பாட்டு நூலாக விளங்குகிறது. உலக உயிர்கள் காலத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. நிலம், பொழுது இவ்விரண்டும்

*உலக இயக்கத்திற்கு அடிப்படை. புவியியல் துறையும் நிலம், காலம் இவற்றையே ஆராயும் அறிவியல் துறையாக உள்ளது.*

*கார்காலம் என்பது மழைக்காலம். தற்காலத்தில் புரட்டாசி ஐப்பசி மாதங்களைக் கார்காலம் என்பர். காலமானது மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது. நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், ஆண்டு, யுகம் ஆகியவற்றை உள்ளடக்கியது.*

*"காரும் மாலையும் முல்லை"- (தொல்.அகத்.நூ.6)*

*முல்லைக்குரிய பொழுதுகளாக கார்காலமும் மாலைப்பொழுதும் சுட்டப்படுகின்றன. நெடுநல்வாடை இலக்கியத்தில் கார்காலம் மற்றும் மாலைப் பொழுதுகளின் வருணனை இடம்பெற்றுள்ளது. குன்றும் குளிரும் வகையில் கடுமையான குளிர் நிலவும் கார்காலத்தில் மழைபெய்து ஊர் செழிப்பாக உள்ளது. மாடுகள் மேய்ச்சலை மறந்து நின்றன., மந்திகள் குளிரால் குறுகி நின்றன., பறவைகள் பறக்க இயலாமல் நடுங்கிக்கொண்டிருக்கின்றன., அனைவரையும் நடுங்கச்செய்யும் குளிர்கால மாலைப்பொழுதில் பெண்கள் விளக்கேற்றி வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். குளிர் மிகுதியால் பெண்கள் மாலைகளை அணியாமல் தலையில் பூக்களை மட்டும் சூடியுள்ளனர். வேனிற்காலங்களில் தென்றல் காற்று வருவதற்காக விடப்பட்ட வழி கதவுகளால் தாழிடப்பட்டுள்ளது. வட நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சந்தனக்கல் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றது. பருவகாலத்திற்கு ஏற்ப வழக்கங்களைக்கொண்டு இயற்கையோடு இயைந்து பழங்கால மனிதர் வாழ்ந்தமைக்கு இவை சான்றாக அமைகின்றன.*

*வளமிக்க இயற்கைச்சூழல் :*

*பூமி ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள உயிர்களால் நிறைந்தது. பூமியில் வாழும் ஒவ்வொரு இனமும் பாதுகாக்கப்பட வேண்டியது. பழந்தமிழர் வாழ்வியலில் உலக உயிர்கள் காக்கப்பட்டன. வாழக்கைக்கு அவற்றைப் பயன்படுத்திய மனிதன் பாதுகாக்கவும் செய்தான். நெடுநல்வாடை இலக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள உயிரினங்களைப் பற்றிய செய்திகள் அக்கால உயிரின வளத்தை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.*

*"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப" - தொல்.அகத்.நூ.20*

*மேற்குறிப்பிட்டுள்ள தொல்காப்பிய இலக்கண அடிப்படையில் விலங்குகள், பறவைகள், தாவரங்கள் உள்ளிட்ட சிலவற்றின் பதிவுகளையும் அவற்றின் பயன்பாட்டையும் பற்றி விரிவாகக் காணலாம்.*

*நெடுநல்வாடை இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள இயற்கை உயிரினங்களுள் மலர்கள் , மரங்கள், செடி, கொடிகள் பற்றிய பதிவுகள் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

| மலர்கள் | பாடல் அடிகள் | மரங்கள்/ செடிகள் | பாடல் அடிகள் |
|---|---|---|---|
| பிச்சி (பித்திகம்) | செவ்விஅரும்பின், பைங்கால் பித்திகத்து, - அடி 40 | கமுகு | முழுமுதல் கமுகின்மணிஉறழ்எருத்தின்- அடி 23 |
| முல்லை | முல்லைப்பல்போதுஉறழ, பூநிரைத்து - அடி 130 | சாதிலிங்கம் (செவ்வரக்கு) | பருஇரும்புபிணித்து, செவ்வரக்கு உரீஇ- அடி 80 |
| | | முசுண்டை | புன்கொடி முசுண்டைப்பொறிப்புறவான் பூ, -அடி 13 |
| | | பீரம் | பொன்போல் பீரமொடு, புதல்புதல்மலர; - அடி 14 |
| | | நெல் | வண்தோட்டு நெல்லின்வருகதிர் வணங்க;- அடி 22 |

பெண்கள் பிச்சிப்பூ மலர்வதைக் கொண்டு மாலைப்பொழுதை அறிந்துகொண்டனர். “மலர்கள் மலர்தலாற் பொழுதை அறிதல் பண்டை வழக்கமென்று தெரிகின்றது.பொழுதினை அறிவித்தல் பற்றியே மலரும் பருவத்துப் பூவரும்பு போதெனப்பட்டதென்று தோற்றுகின்றது.” (19-நச்சினார்க்கினியர் உரை- நெடுநல்வாடை- உ.வே.சா.பதிப்பு) மூன்றாம் பதிப்பு – 1931என்ற நச்சினார்க்கினியர் உரை குறிப்பிடத்தக்கது.

குளிர்காலம் ஆகையால் வடநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சந்தனக்கல் தென்னாட்டு சந்தனம் இரண்டும் பயன்படுத்தப்படாமல் இருந்தன. அக்காலம் முதல் இக்காலம் வரை சந்தனம் மக்களின் பயன்படுபொருளாக இருந்து வருவதை அறியமுடிகிறது. பெண்கள் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை அணியும் வழக்கம் கொண்டிருந்ததை அறியமுடிகிறது. விசேக்ஷ நாட்கள், திருமணம் போன்ற சடங்குகளில் மட்டும் அட்சதைப் பொருளாகப் பயன்படுத்தப்படும் நெல் நாள்தோறும் இறைவழிபாட்டில் மலர்களுடன் சேர்த்து பயன்படுத்தப்பட்டுள்ளது. சாதிலிங்கம், கமுகு மரங்கள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. முசுண்டை, பீர்க்கங்கொடிகள் புதர்போல் மண்டிக்கிடந்துள்ளன. நெற்பயிர்கள் செழித்திருந்தன. பழங்கால தாவர வளமைக்குச் சான்றாக இவற்றைக் கருதமுடிகிறது.

சூழற்பரப்பில் விலங்குகள்பறவைகள் :

சூழற்பரப்பில் மனிதனோடு விலங்குகள், பறவைகள் நீர் வாழ் உயிரினங்கள் ஆகியவை இன்றியமையா இடம்பெறுகின்றன. சார்பு வாழ்வைப் பேணும் மனித சமூகம் அக்காலம் முதல் இக்காலம் வரை தம் சூழற்பரப்பில் இயங்கும் உயிரினங்களை நேரடியாகஉவா மறைமுகமாகவோ வாழ்வோடு இணைத்துக்கொண்டுள்ளது. மனிதன் தனது ஊன் உணவுக்காக விலங்குகள் பறவைகள் இவற்றைச் சார்ந்துள்ளான். காளைகள், குதிரைகள்,யானைகள் ஒருகாலத்தில் பயணத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. வாகனங்கள் பெருகிவிட்ட இக்காலகட்டத்தில் அத்தேவை குறைந்து வழக்கிழந்து வருகின்றது. பழங்காலத்தில் மனிதன் விலங்குகள், பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களை எவ்வாறு அணுகினான் என்பது பற்றி அறிய நெடுநல்வாடை இடம்தருகின்றது. இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள விலங்குகள்,பறவைகள் குறித்து கீழ்க்காணும் அட்டவணை எடுத்துக்காட்டுகிறது.

| வ.எண் | விலங்கு- பறவை | பாடல் அடிகள் |
|---|---|---|
| 1 | காளை (ஏறு)- | ஏறுடைஇனநிரைவேறுபுலம் பரப்பி... அடி 4 |
| 2. | குதிரை (புரவி பரி) | பணைநிலைமுனைஇயபல் உளைப் புரவி -அடி 93 |
| | | பருமம்களையாப்பாய் பரிக்கலிமா - அடி179 |
| 3. | குரங்கு (மந்தி) | மாமேயல்மறப்ப மந்தி கூர - : அடி 9 |
| 4. | பசு (நிரை கறவை) : | ஏறுடைஇன நிரை வேறுபுலம்பரப்பி- அடி 4<br>பறவைபடிவனவீழ கறவை-- அடி 10 |
| 5. | புலி | புலிப்பொறிக்கொண்டபூங்கேழ்த்தட்டத்து- அடி 126 |
| 6. | மான் | நெடுமயிர் எகினத்தூநிறஏற்றை - அடி 91 |
| 7. | யானை (வேழம் பிடி களிறு) | வென்றுஎழுகொடியொடு வேழம்சென்றுபுக- அடி 87 |
| | | களிறு களம்படுத்தபெருஞ்செய் ஆடவர் - 171 |
| | | ஓடையொடுபொலிந்தவினை |

| | | |
|---|---|---|
| | | நவில் யானை - *169* |
| | | மணிபுறத்துஇட்டமாத்தாள் பிடியொடு *-178* |
| *8.* | ஆடு | திண்நிலைமருப்பின்ஆடுதலைஆக-*160 161* |
| *9.* | அன்னம் | குறுங்கால் அன்னமோடு உகளும்முன்கடை- அடி *92* |
| | | துணைபுணர் அன்னத்தூநிறத்தூவி-*132* |
| *10* | குருகு (நாரை) | செவ்வரி நாரையோடு எவ்வாயும்கவர- :அடி *17* |
| *11* | கொக்கு | பைங்காற் கொக்கின்மென்பறைத் தொழுதி- அடி *15* |
| *12* | புறா | மனைஉறை புறவின் செங்கால்சேவல்- அடி *45* |
| *13* | | மயில் கலி மயில் அகவும்வயிர்மருள் இன்இசை-அடி *99* |
| *14* | வண்டு | வண்டு மூசுதேறல்மாந்தி மகிழ்சிறந்து- அடி *33* |

பசுக்கள்,காளைகள்,குதிரைகள்,குரங்கு,மான்,யானை,புலி,ஆடு ஆகிய விலங்குகள் அன்னம்,குருகு,கொக்கு,புறா,மயில் ஆகிய பறவைகளும் இந்நூலில் பதிவிடப்பட்டுள்ளன. இன்றைய சூழலில் காடுகள், வனவிலங்குப் பூங்காக்களில் மட்டுமே பார்க்கும் மான்கள் அரண்மனை முற்றங்களில் சுற்றித்திரிந்ததாகக் குறிக்கப்படுவது அக்காலத்து இத்தகைய உயிரினங்களின் வளமையைக் காட்டுகின்றன. மக்களின் மனைகள் மட்டுமின்றி அரசன் வாழும் அரண்மனை முற்றங்களில் அன்னப் பறவைகளும், கவரிமான்களும் திரிந்தன. இது அக்கால வளமான உயிரினச்சூழலைப் பதிவுசெய்கிறது. போரில் வெற்றி பெற்று வெற்றிக்கொடியுடன் வரும் யானைகள் வேழம் என்று குறிக்கப்படுகின்றன. ஆண்யானைகள்,பெண்யானைகள், குதிரைகள் யாவும் மனிதரின்; அன்றாட வாழ்வியல் சூழலில் இடம்பெற்றுள்ளன. பசுமாடுகள் கூட்டமாக (இனநிரை) மேய்ச்சல் நிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளன. மனித வாழ்வில் இத்தகைய உயிரினங்கள் பயன்படுத்தப்பட்டும் பேணப்பட்டும் வந்துள்ளமையை அறியமுடிகிறது.

புழங்கு பொருட்கள் :

மனிதன் தனது வாழ்வில் பயன்படுத்தக்கூடிய புழங்குபொருட்கள் இயற்கையாகப் பெறப்படுபவையாகவோ அல்லது இயற்கை வளங்களைப் பயன்படுத்திச் செயற்கையாக உருவாக்கப்படுபவையாகவோ அமைகின்றன. புழங்குபொருட்களின் தேவை அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் இயற்கையை நுகரும் போக்கு பெருகிவருகிறது. நுகர்வு கலாச்சாரம் விரிவடைவதால் இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பழங்கால மனிதனின் புழங்குபொருட்கள் குறித்து அறிகையில் அக்காலத்தில் எத்தகைய எளிமையான வாழ்வுமுறை பின்பற்றப்பட்டது என்பதை அறியமுடிகிறது. அவ்வகையில் நெடுநல்வாடை நூலில் இடம்பெற்றுள்ள புழுங்குபொருட்கள் பற்றி கீழ்க்காணும் அட்டவணை எடுத்துக்காட்டுகிறது.

| வ.எண் | புழங்கு பொருட்கள் | பாடல் அடிகள் |
|---|---|---|
| *1* | வான்கேழ்வட்டம் | |
| *2* | செங்கேழ் வட்டம் | கைவல்கம்மியன் கவின் பெறப்புனைந்த செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்*(57,58)* |
| *3.* | யாழ் | கருங் கோட்டுச் சீறியாழ் *(36 – 44)* |
| *4.* | இரும்பு விளக்கு | இரும்புசெய்விளக்கின் ஈர்ந்திரிகொளீஇ |

| | | |
|---|---|---|
| *5* | குவளை அல்லது செம்பு | தொகுவாய்க்கன்னல் தண்ணீர் உண்ணார்...(65) |
| *6* | குழை | குழை நெடுநீர் வார்குழை -139 |
| | கட்டில் | பெரும்பெயர்ப் பாண்டில் - 123 |
| *8* | முத்துகள் | முத்துடைச் சாலேகம் நாற்றி - 125 |
| *9* | தலையணைகள் | தூநிறத்தூவி இணையணை யிட்டு -133 |
| *10* | ஆடை | காடிகொண்ட கழுவுறு கலிங்கத்து..-134 |

குளிர்ச்சிக்காக சந்தனம், காற்றுக்காக கைவிசிறி, இசைக்காக யாழ், இறைவழிபாட்டிற்காக இரும்புவிளக்கு, தண்ணீர் பருக குவளை, அரச குடும்பமாயின் படுத்துறங்க கட்டில் தலையணைகள், உடுக்க உடை, குழை முதலான அணிகலன்கள், ஆகிய பயன்பாட்டுப் பொருட்களை இந்நூல் வழி அறியமுடிகிறது. அரச குடும்பங்களில் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட அழகு வேலைப்பாடுகள் நிறைந்த கட்டில்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முடிவுரை :

சூழற்புவியியல் நோக்கில் நெடுநல்வாடை இலக்கியத்தை ஆராய்கையில் பழங்கால மனிதன் இயற்கையை எவ்வாறு அணுகினான் என்பதை அறியமுடிகிறது. பருவகாலங்களையும் சூழற்பரப்பில் பரவியிருந்த உயிரினங்களையும் எவ்வாறு எதிர்கொண்டான் என்பதையும் அறியமுடிகிறது. அக்கால தாவரங்கள், விலங்குகள்,பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களின் வளமையையும் இயற்கைக்குப் பாதிப்பில்லாத பாதுகாப்பான வாழிடச்சூழலையும் பற்றி நெடுநல்வாடை இலக்கியம் மூலமாக அறியமுடிகிறது.

துணை நூற்பட்டியல் :


1. நெடுநல்வாடை – நச்சினார்க்கினியர் (உ.ஆ.) - கழகவெளியீடு உ.வே.சா.பதிப்பு – 1931(மூன்றாம் பதிப்பு)
2. சங்கஇலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும்- ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.)மெய்யப்பன் பதிப்பகம் - 2003
3. சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம் - பெ.மாதையன்; -- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010 மார்ச்- சென்னை.)
4. தமிழர் கட்டிடக்கலை - முனைவர். கோ.தெய்வநாயகம் - உலகத்தமிழாராய்சசி நிறுவனம் – முதற்பதிப்பு -2002
5. தொல்காப்பியம் பொருளதிகாரம் - கழகவெளியீடு


********* ********* ********** ********* ********* ********** ********** **********